# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXIX | MARCH 2024 | No. 03


## பரிசுத்த வேதாகமம்

இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 31:17–24

17. கர்த்தாவே, உம்மை நோக்கிக் கூப்பிட்டேன்; நான் வெட்கப்பட்டுப் போகாதபடிச் செய்யும்; துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் பாதாளத்தில் மவுனமாயிருக்கட்டும்.

18. நீதிமானுக்கு விரோதமாய்ப் பெருமையோடும் இகழ்ச்சியோடும் கடினமாய்ப் பேசுகிற பொய் உதடுகள் கட்டப்பட்டுப் போவதாக.

19. உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது!

20. மனுஷருடைய அகங்காரத்துக்கு அவர்களை உமது சமுகத்தின் மறைவிலே மறைத்து, நாவுகளின் சண்டைக்கு அவர்களை விலக்கி, உமது கூடாரத்திலே ஒளித்து வைத்துக் காப்பாற்றுகிறீர்.

21. கர்த்தர் அரணான நகரத்தில் எனக்குத் தமது கிருபையை அதிசயமாய் விளங்கப்பண்ணினபடியால், அவருக்கு ஸ்தோத்திரம்.

22. உம்முடைய கண்களுக்கு முன்பாக இராதபடிக்கு வெட்டுண்டேன் என்று நான் என் மனக்கலக்கத்திலே சொன்னேன்; ஆனாலும் நான் உம்மை நோக்கிக் கூப்பிட்டபோது, என் விண்ணப்பங்களின் சத்தத்தைக் கேட்டீர்.

23. கர்த்தருடைய பரிசுத்தவான்களே, நீங்களெல்லாரும் அவரில் அன்புகூருங்கள்; உண்மையானவனைக் கர்த்தர் தற்காத்து, இடும்பு செய்கிறவனுக்குப் பூரணமாய் பதிலளிப்பார்.

24. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களே, நீங்களெல்லாரும் திடமனதாயிருங்கள். அவர் உங்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்.

# நிலையில்லா நேரத்தில் நிலையான தேவன்!

*Rev.* ஏஞ்சலின் செல்வகுமாரி, *Hon. Editor-in-Chief*



**அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே; ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணினீர். - சங்கீதம் 77:14**

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்!

இந்த செய்தியின் மூலமாய் உங்களுடன் மீண்டும் தொடர்பு கொள்வது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. 2024ஆம் ஆண்டில் ஏற்கனவே இரண்டு மாதங்களைக் கடந்து விட்டோம். நேரம் விரைவாய்ப் பறப்பதுபோல் இருக்கிறது! நாம் நம்பும் தேவன் அதிசயங்களைச் செய்கிறவர் என்றும், அவரது ஜனங்களுக்குள்ளே வல்லமையை விளங்கப் பண்ணுகிறவர் என்றும் சங்கீதம் 77 அறிவிக்கிறது. ஒருவராலும் செய்யக்கூடாதவைகளைச் செய்ய அவர் ஆவலாய்க் காத்திருக்கிறார். நமது வாழ்க்கைப் பிரயாணம் முழுவதிலும், அசைக்கமுடியாத நம்பிக்கையை நாம் அவர்மேல் வைப்பதில் அவர் மிகவும் மகிழ்ச்சியடைகிறார்.

நமது வாழ்க்கைப் பயணம், எதிர்பாராத திருப்பங்களையும், மாற்றங்களையும் கொண்டது. வேகத் தடைகள், புரியாத வழிகள், திடீர் இறக்கங்கள் போன்ற பல காரியங்கள்

தொடர்ச்சி 3–ம் பக்கம்.....


அழைப்பின் எதிரொலி!



**கிறிஸ்தவ யூடியூப் சானல்!**

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன் நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் – காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை – காலை 8.30 மணிக்கு

# ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)

REACHING NATIONS

## உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...





**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


HON. EDITOR-IN-CHIEF
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

MANAGING EDITOR
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

GENERAL MANAGER
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM, MBA

ADMINISTRATION
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

EDITORIAL BOARD
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Sis. L. Mariya Anjalin, M.A., M.Sc., B.Ed.
Rev. Dr. K.R. Rajasekaran



EDITOR, PUBLISHER & PRINTER
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

E.MAIL
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

WEBSITES
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.com

YOUTUBE CHANNEL
Echo of His Call


**"இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக; அவரே அதிசயங்களைச் செய்கிறவர்." ~ சங்கீதம் 31:17~24**

கர்த்தருக்குள் மிகவும் பிரியமானவர்களே,

ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறோம்.

கடந்த நாட்களில் கர்த்தர் நம் ஊழியங்களை அதிசயமாக நடத்தினார். நம் யூடியூப் செய்திகள் மற்றும் பத்திரிகைகள் மூலம் தொலைதூரத்தில் உள்ள மக்களையும் தேவன் தம்முடைய அன்பின் செய்திகளால் சந்தித்தார். 2023 டிசம்பர் 31–ம் தேதி நடந்த நமது புதுவருட



புதுவருட முழு இரவு ஆராதனை


முழு இரவு ஆராதனை தேவன் மிக ஆசீர்வாதமாக நடத்தினார்.

நம் **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மூலம் உருவாக்கப்பட்ட வலசரவாக்கத்தைச் சார்ந்த போதகர் P. ஆரோக்கியதாஸ் அவர்கள் நம் தலைமை அலுவலகம் வந்து தேவன் அவர்களை பயன்படுத்தும் வல்லமையான செயல்களை சாட்சியாய்ப் பகிர்ந்தார்கள். அங்கு அவர்கள் புதியதோர் ஊழியத்தையும் ஆரம்பித்துள்ளார்கள்.



தலைமைப் போதகருடன் போதகர் *P.* ஆரோக்கியதாஸ் அவர்கள்

நம் **அழைப்பின் எதிரொலி** இந்தி மொழி பத்திரிகையைப் படித்து பயன்பெற்ற சத்தீஸ்கர் மாநிலத்தைச் சார்ந்த சகோதரர் சுரேஷ் டிர்கே அவர்கள் தன் மகன் அவினாஷ் டிர்கே மற்றும் உறவினருடன் தலைமை சபைக்கு வந்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தினர்.



**தலைமைப் போதகருடன் சகோ. சுரேஷ் டிர்கே அவர்கள், அவர்களுடைய மகன் அவினாஷ் டிர்கே அவர்கள்**


Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ◘ BIBLECOR - Postal Courses (3 languages) ◘ YouTube Ministry ◘ Online Courses ◘ Theological Correspondence Courses (2 languages) ◘ Church Planting ◘ Nehemiah Bible Colleges ◘ Gospel Printing Press ◘ Great Commission Partners ◘ St. Paul's Matriculation School ◘ Crusades ◘ Community Development

மேலும் நம் தலைமை சபை ஊழியங்களில் முன்னணியில் நின்று செயல்படும் நம் உடன் ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்.



மகாபலிபுரத்தில் ஒருநாள் தியானமுகாம்

**26.01.2024** அன்று நம் வேதாகமக் கல்லூரிகளின் மாணவர்கள் மற்றும் தலைமைச் சபை வாலிபர்கள் அடங்கிய **60** நபர்களுக்கு மகாபலிபுரத்தில் வைத்து நடத்திய ஒருநாள் தியானமுகாமை (Retreat) கர்த்தர் ஆசீர்வதித்தார்.

கடந்த நாட்களில் வட இந்திய ஊழியங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட அருமை சகோதரர்கள் வழக்கறிஞர் தர்மராஜ், போதகர் ப்ராங்க்ளின் மற்றும் போதகர் தேவதாஸ் அவர்களுடன் நமது முழுநேர இந்தி **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மற்றும் இடம் பெயர்ந்து வந்திருக்கும் வட இந்திய மக்களுக்கு சுவிசேஷத்தை எடுத்து செல்லுதல் பற்றி ஒரு நீண்டகால திட்டத்தை உருவாக்க கர்த்தர் உதவி செய்தார்.



**அழைப்பின் எதிரொலி** மூலம் நடைபெறும் எல்லா ஊழியங்களையும், செயல்படும் எல்லா ஊழியர்களையும் கர்த்தர் அதிகமதிகமாக ஆசீர்வதிக்க ஜெபியுங்கள். தேவ கிருபை உங்களோடிருப்பதாக. ஆமென்.

கிறிஸ்து இயேசுவுக்குள் உங்கள் ஊழியர்கள்,

**போதகர் அலக்ஸ் சாம்சன் சாம்**
**போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**
(+91) 98410 71858 / 98412 71858,
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org

***

## நமது அழைப்பின் எதிரொலி பத்திரிகையின் வாசகர்களின் கவனத்திற்கு!

*நமது **அழைப்பின் எதிரொலி ஊழியத்தின்** 5 நிமிட தேவ செய்திகளும், ஜெபங்களும் தினமும் காலை 2.00 மணி முதல் தமிழ், தெலுங்கு, இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில்* **Echo of His Call YouTube** *சானலில் ஒளிபரப்பாகிக் கொண்டிருக்கின்றன. இதைப் பார்ப்பதன் மூலம் கர்த்தரின் கிருபையைப் பெறலாம்.*

*மேலும், (+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய என்னுடைய தனிப்பட்ட* (Personal) *இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

**– போதகர் எஸ். சாம் செல்வ ராஜ்**

***

... 1-ம் பக்கத் தொடர்ச்சி

நம் பயணத்தில் நிச்சயமில்லாத தன்மையை அளிக்கின்றன. அறியாத சாலைகள், அடிக்கடி வரும் மாற்றங்கள், நமக்கு ஒரு பெரிய சவாலாகவே நம் பயணத்தில் காணப்படுகிறது.

நான் வாகனம் ஓட்டும்போது, வாகனத்தில் அமைந்துள்ள வழிகாட்டு முறையை நம்புவது வழக்கம். முதலாவது காரணம், நான் அடைய வேண்டிய இடத்தை சரியாகச் சென்றடைய வேண்டும். இரண்டாவதாக, அதுவும் மிக முக்கியமாக, நான் செல்லும் சாலை எத்தகையதாக இருக்க வேண்டும் என்று அறிந்து கொள்ள வேண்டும். நான் ஒரு மலைப்பாங்கான இடத்தில் வசிப்பதால், ஏற்றமும், இறக்கமும் அதிகமாக அப்பாதையில் இருக்கும். என் முன்னேயுள்ள சாலையின் படத்தை கூகுள் மேப் (Google Map) காண்பிப்பதால் நான் கவனமாக ஓட்ட முடியும். இதற்கு முன் செல்லாத சாலைகளில் கூட, வளைவுகள் வருவதை முன்னறிந்து, பிற வாகனங்களை முந்திச் செல்லாமல், நேரான சாலைகளில் முந்திச் செல்லவும், புரியாத பாதைகளில் மெதுவாகச் செல்லவும், மிகவும் கவனமாக ஓட்டவும் அந்த கருவிகள் எனக்குப் பயனுள்ளதாய் இருக்கும். GPS (Global Positioning System) என்ற கருவி, சாலை யின் நிலையற்ற தன்மையை அறிய உதவும். நம் வாழ்வில் GPS நம்கூடவே இணைக்கப் பட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று, நான் சில நேரங்களில் விரும்புவதுண்டு. துவக்கத்திலிருந்தே முடிவையும் அறிந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

நீங்கள் எப்படியோ எனக்குத் தெரியாது. ஆனால் என்னைப்

## Statement about ownership and other particulars about the Newspaper Echo of His Call (Tamil) - Form IV (See Rule 8)

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | **New No. 8 & 10, Old No. 18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai - 600 005.** |
| 2. Periodicity | : | **Monthly** |
| 3. Printer, Editor, Owner & Publisher | : | **S. Sam Selva Raj** (Same Address) |
| 4. Nationality | : | **Indian** |

I, **S. Sam Selva Raj** hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**March 2024** **S. Sam Selva Raj.**

பொறுத்தவரைக்கும் எதையாவது ஆரம்பிக்கும் முன்னதாகவே அதன் முடிவு என்ன என்பதை நான் அறிய விரும்புவேன். நான் எதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறேன் என்பதை அறியாமல் பணி செய்வது எனக்குக் கடினம். இறுதி முடிவை அறிந்துவிட்டு, பின்னோக்கி பணி செய்தால் நல்லது என்றுகூட நான் எண்ணுவதுண்டு. ஆனால், நம் வாழ்க்கை அவ்வாறு செயல்படாது. நாம் சற்றும் எதிர்பாராத நேரங்களில் எதிர்பாராத சவால்களை வாழ்க்கை நம் மீது அள்ளி வீசும். திடீரென்று நமக்கன்பானவர் ஒருவர் மரித்துவிடலாம். அல்லது திடீரென்று வேலை மாற்றம் ஏற்படலாம். திடீர் பணக்கஷ்டங்கள், உறவுகளில் எதிர்பாராத புயல்கள் போன்றவை நாம் கற்பனை கூட செய்யாத சூழ்நிலைகள் நமக்கு வரலாம்.

அத்தகைய நிலையற்ற காரியங்களை நாம் எப்படி கையாளுகிறோம்? எனக்கு தெரிந்த ஒரு தம்பதியினர் 27 வருடங்களாக திருமணமாகி வாழ்ந்து, மூன்று அழகான பிள்ளைகளையும், பெற்று வாழ்ந்து வந்தனர். ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்ட அன்பான தம்பதியர் என்று எல்லோரும் நினைத்திருந்தனர். திடீரென்று அவர்கள் விவாகரத்து செய்யப்போவதாகக் கேள்விப்பட்டு அதிர்ச்சியடைந்தேன். அதைக்குறித்த அந்த சகோதரியிடம் விசாரித்தபோது, “நானே அதைச் சற்றும் எதிர்ப்பார்க்கவில்லை; எதிர்பாராத நேரத்தில் இது என் வாழ்க்கையில் நடக்கும் என்று நினைத்ததேயில்லை” என்று பதிலளித்தார்கள்.

இது கடினமும், வேதனைக்குரியது மாகும். இருப்பினும் இது உண்மை. இத்தகைய எல்லா சூழ்நிலைகளிலும் ஒன்று நிச்சயம் ; கர்த்தர் உண்மையுள்ளவர்! பயம், வேதனை, பாடுகள், தோல்விகள், ஏமாற்றங்கள், சந்தோஷம், மகிழ்ச்சி போன்ற அனைத்தின் மத்தியிலும், கர்த்தர் உண்மையுள்ளவர்.

சங்கீதம் 77:14இல் வேதம் சொல்கிறது. “**அதிசயங்களைச் செய்கிற தேவன் நீரே; ஜனங்களுக்குள்ளே உம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணினீர்.**” தேவன் இதை எல்லா சூழ்நிலைகளிலும் செய்கிறார்.

இன்றைய நிலையற்ற காலக்கட்டத்தில், நம்முடைய சபையிலும், குடும்பங்களிலும் தேவன் என்ன செய்யப் போகிறாரோ என்று ஒவ்வொரு தனிப்பட்ட நபரும், சபையும் அறிய வாஞ்சிக்கிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு பெரிய கேள்வி நம்முன் நிற்கிறது. “இத்தகைய சூழ்நிலைகளிலெல்லாம் தேவன் எங்கே?” இது பொதுவானதும், பயமுறுத்துகிற கேள்வியுமாயிருக்கிறது.

மக்கள் தங்கள் வாழ்க்கைப் பயணத்தில் சிக்கிக் கொண்டவர்களாய், எங்கே போவது, எப்படி போவது, எதிர் காலத்தில் தங்களது அடுத்த நிலையென்ன என்று கலங்கும்போது, தேவன் அதிசயங்களைச் செய்கிறார் என்று வேதாகமம் நமக்கு போதிக்கிறது. நிலையில்லா நேரங்கள்! நம்மில் எத்தனை பேர் இத்தகைய நிலையில்லா காலக்கட்டத்தினூடே போய்கொண்டிருக்கிறோம் என்று எனக்குத் தெரியாது. என் வாழ்க்கை மாறுமா? சவாலான நேரத்தை நீங்கள் கடந்து செல்லும்போது, தேவன் தமது சிங்காசனத்தில் இருக்கிறார் என்று மறந்து போகக் கூடாது. அவர் இன்னும் ஆளுகை செய்கிறவராயிருக்கிறார்! நம் வாழ்வில் அவரை நோக்கிப் பார்க்க வேண்டும் என்று சில சூழ்நிலைகளை நம் வாழ்வில் அவர் அனுமதிக்கிறார். அந்த சூழ்நிலைகளின் மூலம் அவர் உயர்ந்தவராய் வெளிப்படுவார்.

இஸ்ரவேலரின் வாழ்க்கையை விட வேறு சிறந்த உதாரணத்தைக் காண முடியாது. அடிமைத்தனத்தின் கட்டிலிருந்து விடுதலையாக 400 வருடங்களாக அவர்கள் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். இறுதியில், கர்த்தர் அற்புதங்களைச் செய்து எகிப்தியர் நடுவே தமது வல்லமையை வெளிப்படுத்தினார்: வாதைகள், மரணம், செங்கடலைப் பிளந்து, எகிப்திய வீரர்களை அதிலேயே மூழ்கடித்தல், அதே கடல் மூலமாய் இஸ்ரவேலரைக் கரை சேர்த்தல். அந்த 10 வாதைகளும் எகிப்தியருக்கு தேவ வல்லமையை வெளிப்படுத்தின. இவை ஒன்றையும் செய்யாமலேயே தேவன் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்திருக்கலாம். எகிப்தியர் மட்டும் தமது வல்லமையை அறிந்தால் போதாது. இந்த யெகோவா தேவன் எப்படிப்பட்டவர் என்று தேவ ஜனமாகிய இஸ்ரவேலரும் புரிந்து கொள்ள வேண்டுமென தேவன் விரும்பினார். அவர் எப்படிப்பட்ட தேவன்! எவ்வளவு வல்லமையுடையவர்! காலங்களின் சோதனையிலும் வெற்றி சிறந்தார். இந்த 2024 ஆம் ஆண்டிலும் நாம் அவரது வல்லமையைக் குறித்து பேசிக் கொண்டிருக்கிறோமே!

## நிலையற்ற காலக்கட்டங்களை நாம் எவ்வாறு கையாள வேண்டும்?

நிலையற்ற சூழ்நிலைகளில் நாம் கீழ்க்காணும் உணர்வுகளை அனுபவிக்க நேரிடும்: குழப்பம், சந்தேகம், கேள்விகள், பயம், கவலை, இன்றைய சூழ்நிலைக்கு மற்றவர்களைப் பழி சொல்வது, கோபம், ஏமாற்றம், எரிச்சல், கசப்பு, எதிர்பார்த்ததில் ஏமாற்றம், உற்சாகமின்மை, சோர்வு, தனிமை, துக்கம், படபடப்பு என்று முடிவில்லா உணர்வுகள் நம்மைத் தாக்கும். எனவே, கணினியை மூடிவிட்டு, அனைத்தையும் அழித்துவிட்டு செல்வதுபோல, எல்லோரையும் போல, ஒன்றுமே நடக்காதது போல, ‘நடப்பது நடக்கட்டும்’ என்ற எண்ணத்தில் வாழ்வதா?

இத்தகைய நேரங்களில் நாம் என்ன செய்ய வேண்டும்?

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....

நெகேமியா வேதாகமக் கல்லூரி,
சென்னை.

வேளச்சேரி – முழுநேரம் – இந்தி
சேப்பாக்கம் – மாலை நேரம் – தமிழ்
(திங்கள், செவ்வாய், வியாழன்)

Registered Candidate for Membership
Asia Theological Association (ATA)

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 54 வருட அனுபவ ஸ்தாபனம்.

Certificate in Ministry
Diploma in Theology

கல்வித்தகுதி : 10ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்
உடனே அணுகவும் !

தொடர்புக்கு : போதகர் எஸ். சாம் செல்வ ராஜ், நெகேமியா வேதாகமக் கல்லூரி,
10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.
தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS



**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2024 மார்ச் 19 முதல் ஏப்ரல் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்திலுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

- மார்ச் 19 ⇨ நமது **வேதாகமத் தபால்வழிக் கல்வி** மற்றும் **அஞ்சல்வழி இறையியல் கல்விகளை** ஆசீர்வதித்து வருவதற்காக ...
- மார்ச் 20 ⇨ ஜனவரி 26–ம் தேதி மகாபலிபுரத்தில் நடைபெற்ற **நெகேமியா வேதாகமக் கல்லூரி** மாணவர்கள் மற்றும் தலைமைச்சபையில் உள்ள வாலிபர்களுக்கான ஒருநாள் தியானமுகாமை ஆசீர்வதித்த கிருபைக்காக ...
- மார்ச் 21 ⇨ நமது தலைமைப் போதகர் மற்றும் அவர்களது குடும்பத்தினரை எல்லாவிதமான தீய வல்லமைகளுக்கும் விலக்கி காத்து வருவதற்காக ...
- மார்ச் 22 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் இன்றுவரை ஆசீர்வதித்து வருவதற்காக ...
- மார்ச் 23 ⇨ நமது தலைமைப் போதகரை முழு அர்ப்பணிப்புடன், பன்மொழி ஊழியங்களின் மூலமாக சுவிசேஷத்தினை பிரசங்கித்திட கிருபை பாராட்டினதற்காக ...
- மார்ச் 24 ⇨ நமது ஜெபப் பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள், பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரை ஆசீர்வதித்து வருவதற்காக ...
- மார்ச் 25 ⇨ எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்து வருவதற்காக ...
- மார்ச் 26 ⇨ நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளை** ஆசீர்வதித்து வருவதற்காக ...
- மார்ச் 27 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...
- மார்ச் 28 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர் நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக ...
- மார்ச் 29 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு** அர்ப்பணிப்புள்ள கிறிஸ்தவ ஆசிரியைகள் மற்றும் பள்ளி முதல்வரை தந்து ஆசீர்வதித்த கிருபைக்காக ...
- மார்ச் 30 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக...
- மார்ச் 31 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்களுக்காகவும், அவர்களது குடும்பத்தினர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக ...
- ஏப்ரல் 01 ⇨ கடந்த மாதத்தில் நமது தேவைகளை நிறைவாக்கிய கிருபைக்காக ...
- ஏப்ரல் 02 ⇨ அரசியல் மற்றும் மத எதிர்ப்புகள் மத்தியிலும் நமது கிறிஸ்தவ ஊழியங்களை வெற்றிகரமாக நடத்தி வரும் கிருபைக்காக ...
- ஏப்ரல் 03 ⇨ அனைத்து நாடுகளின் மத்தியிலும் நிலவிவரும் போர் பீதி மற்றும் குழப்பங்கள் மத்தியில் தேவ பாதுகாப்பு கொடுத்து வரும் கிருபைக்காக ...

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

- ஏப்ரல் 04 ⇨ கிறிஸ்தவ ஸ்தாபனங்களின் ஆசீர்வாதங்களுக்காகவும் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் ...
- ஏப்ரல் 05 ⇨ வைரஸ் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களுக்கு எதிராக பாதுகாப்பை வேண்டி ...
- ஏப்ரல் 06 ⇨ நமது **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** எல்லாவிதமான வழிகள் மற்றும் செயல்பாடுகளின் விஸ்தீரணத்திற்காக ...
- ஏப்ரல் 07 ⇨ உலகத்தில் உள்ள ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்காக ...
- ஏப்ரல் 08 ⇨ நமது ஜெப ஊழியத்தில் உதவி செய்பவர்களுக்காகவும், நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகள் அனைவருக்காகவும் ...
- ஏப்ரல் 09 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்களுக்காகவும், அவர்களின் குடும்ப அங்கத்தினர்களுக்காகவும் ...
- ஏப்ரல் 10 ⇨ உலகத்திலுள்ள அனைத்து இளம்தலைமுறையினரும், குழந்தைகளும் கர்த்தரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டி ...
- ஏப்ரல் 11 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடுதலிலும் அனைத்து நாடுகளும் ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட ...
- ஏப்ரல் 12 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவர் மீதும், அவர்களது குடும்பத்தினர் மீதும் கர்த்தரின் கருணை பொழியப்பட வேண்டி ...
- ஏப்ரல் 13 ⇨ நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரியின்** நூலக புத்தகங்கள் KOHA software–ன் மூலமாக பதிவேற்றப்படுவதற்காக ...
- ஏப்ரல் 14 ⇨ உலகமனைத்திலும் உள்ள மக்களின் தேவைகள் சந்திக்கப்பட ...
- ஏப்ரல் 15 ⇨ நமது ஊழியங்களின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட வேண்டி ...
- ஏப்ரல் 16 ⇨ உலகத்தில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி ...
- ஏப்ரல் 17 ⇨ தேவனின் கிருபை மீண்டும் ஒருமுறை மக்களின்மேல் பொழியப்பட வேண்டி ...
- ஏப்ரல் 18 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்களது குடும்பத்தினரையும் அனைத்து தீய சக்திகளிடமிருந்து பாதுகாக்கப்பட வேண்டி ...

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

**1. கர்த்தருடைய வாக்குத்தத்தங்களைப் பற்றிக் கொள்ள வேண்டும்! அவருக்கு நம் எதிர்காலம் தெரியும்!!**

நீங்கள் அறியாத உங்கள் எதிர்காலத்தை எல்லாம் அறிந்த தேவனது கரத்தில் கொடுத்து விடுங்கள்.

தேவனையே பற்றிக் கொள்ளுங்கள். எதையும் ஆரம்பிக்கவோ திட்டம் பண்ணவோ தொடங்குமுன் ஜெபித்து தேவ ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். எந்த மனிதனிடமும் ஆலோசனைக்குச் செல்லும் முன்பு தேவனிடம் செல்ல வேண்டும். புதிதாக எதையும் செய்வதற்கு முன் கர்த்தருடைய வசனம் அதை உறுதி செய்ய வேண்டும்.

நிலையில்லா நேரங்களில், தேவ பிள்ளைகளுக்கு, அவர்கள் பற்றிக் கொள்ளவும், நம்பிக்கை வைக்கவும் கர்த்தருடைய வசனம் இருக்கிறது. உங்களது நம்பிக்கை இன்று எங்கேயுள்ளது? இன்று யார் உங்களது நம்பிக்கை? உங்கள் சம்பளம் அல்லது பாதுகாப்பான வேலையா? நாளை நாம் நம் வேலையை இழந்துவிட்டால், “எனக்கு குறையொன்றும் இல்லை; என் தேவன் என் தேவைகளையெல்லாம் சந்திப்பார்; கர்த்தருடைய நன்மை என்னைத் திருப்தியாக்கும்” என்று நம்மால் கூற முடியுமா?

நிலையில்லா சூழ்நிலைகளில், உண்மையுள்ள தேவனுடைய பிரசன்னத்தைத் தேடுங்கள். ஏனென்றால் அவருக்கு நமது எதிர்காலம், நாளைய தினம் மற்றும் முந்தின நாட்கள் ஆகியவை அனைத்தும் தெரியும். அவரையும் அவரது வார்த்தையையும் பற்றிக் கொள்ளுங்கள். யாத்திராகமம் 4:2 இல், **கர்த்தர் அவனை நோக்கி: உன் கையிலிருக்கிறது என்ன என்றார். ஒரு கோல் என்றான்** (மோசே). மோசே தனது பழைய மரக்கோலை தேவனது கரத்தில் வைத்தபோது அந்த அற்புதம் நடந்தது. அது, ‘தேவகோலாக’ மாறியது. அந்த சாதாரண கோல் தேவகோலாக மாறியதின் வல்லமையை அங்கே காணலாம்!

பின்பு யாத்திராகமம் 17:9 இல் இவ்வாறு வாசிக்கலாம்: **அப்பொழுது மோசே யோசுவாவை நோக்கி: நீ நமக்காக மனிதரைத் தெரிந்து கொண்டு, புறப்பட்டு, அமலேக்கோடே யுத்தம் பண்ணு; நாளைக்கு நான் மலையுச்சியில் தேவனுடைய கோலை என் கையில் பிடித்துக் கொண்டு நிற்பேன் என்றான்.** தேவனுடைய கோலினால் அவர்களால் யுத்தம் செய்ய முடிந்தது.

மோசேயின் வாழ்க்கையைப் பார்ப்போமானால், எகிப்திற்குத் திரும்பிப் போக மனதில்லாதவனாய், சாக்குபோக்கு சொல்கிறவனாய் அவனைப் பார்க்கலாம். நிச்சயமற்ற நிலையில்லா காலங்கள், அவனுடைய குடும்ப நலனைக் குறித்தும், தலைமைத்துவத்தை இழந்து நிற்கும் நிலை குறித்தும், ஒரு இளவரசனாக அவனுக்கு இருந்த திறமைகளைப் பயன்படுத்தாத இன்றைய நிலை, பார்வோனிடம் பேசக்கூடிய வாக்கு வல்லமையற்ற நிலை, அவனது ஜனமே அவனை மதிக்காத காரணத்தினால் ஏற்பட்ட பயம் போன்றவைகள் பல கேள்விகளை அவன் உள்ளத்தில் எழுப்பின.

இத்தகைய கேள்விகளும் சந்தேகங்களும் இருந்த போதிலும், தன் கையில் இருந்ததை தேவனிடம் சமர்ப்பித்தபோது, அது அசாதாரண பொருளாய் மாறியது. அதன் மூலம் தேவன் அதிசயங்களைச் செய்யவும், அவரது வல்லமையை வெளிப்படுத்தவும் முடிந்தது.

தேவன் அதிசயங்களைச் செய்ய உங்கள் கரத்தில் உள்ளதை அவரிடம் சமர்ப்பிக்க உங்களுக்கு இன்று விருப்பமா? தேவனிடத்தில் உங்களது பயம், கேள்விகள், குழப்பம், சந்தேகம், கவலை, இன்றைய நிலைக்குப் பிறரைப் பழிபோடும் குணம், கோபம், ஏமாற்றம் மற்றும் ஏனைய எதிர்மறை உணர்ச்சிகள் போன்றவற்றைக் கொடுத்து விடுங்கள்.

அது தேவனது கோலாக மாறட்டும்!

**2. உங்களைச் சுற்றிலும் தேவ பக்தியுள்ளவர்களை வைத்துக் கொள்ளுங்கள்; அவர்கள் உங்களோடு நடக்கட்டும்.**

‘சபை’ மற்றும் ‘சபைக் குடும்பம்’ ஏற்படுத்தப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணம். உங்கள் வாழ்வில் ஒரு நிலையற்ற காலக்கட்டம் வரும்பொழுது, உங்களோடு நடக்க, உங்களை பெலப்படுத்த, உங்களோடு ஜெபிக்க, உங்கள் தனிமையின் பாதையில் உங்களைத் தாங்கி உயர்த்த, தேவ பக்தியுள்ள மக்கள் உங்களைச் சுற்றிலும் இருக்க அனுமதியுங்கள். நம்மோடு இணைந்து நடக்கவும், ஜெபிக்கவும், ஆவிக்குரிய ஆலோசனை கொடுக்கவும் நாம் அப்படிப்பட்டவர்களுடன் உறவு வைத்துக் கொள்ள வேண்டும்.

உங்களுடன் தொடர்ந்து இணைந்து ஜெபிக்க யாரையாகிலும் இன்றே தெரிந்து கொள்ளுங்கள். ஆவிக்குரிய நல்ல அனுபவமிக்க ஒருவர், தன் ஆவிக்குரிய அனுபவத்தால் உங்களை ஆசீர்வதிக்கக் கூடுமானால் அவரைத் தெரிந்து கொள்ளுங்கள். இல்லையென்றால், உங்களது ஆவிக்குரிய அனுபவங்களால் யாரையாவது ஆசீர்வதிக்க முற்படுங்கள். இரண்டுமே உங்களால் செய்யக்கூடுமானால், அது மிகவும் நல்லது.

தானியேலின் வாழ்க்கையிலும் அப்படிப்பட்ட காலக்கட்டம் இருந்தது – ஒரு இளம் வாலிபனாக, தன் குடும்பத்தாரை விட்டு, நண்பர்கள், பிறந்த ஊர், உறவினர்கள், சுதந்திரம் ஆகியவைகளை விட்டு, அறியாத தேசத்திற்கு ஒரு அடிமையாகப் போக வேண்டியிருந்தது.

‘தானியேல்’ புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் அவனுக்கு தேவ தயவு கிடைத்ததை வாசிக்கலாம். எல்லாம் நன்றாகத்தான் இருந்தது. ஆனால் இரண்டாம் அதிகாரத்தில் திடீரென்று அவன் ஒரு பெரிய பிரச்சனையைச் சந்திக்க வேண்டியதாயிருந்தது.

ராஜா ஒரு சொப்பனம் **காண்கிறான். அதினால், அவனுடைய ஆவி கலங்கி, அவனுடைய நித்திரை கலைந்தது.** (தானியேல் 2:1).

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....


# நெகேமியா வேதாகமக் கல்லூரி

## 2023-2024-க்கான பட்டமளிப்பு விழா



**இடம் : BKN ஹால், வேப்பேரி, சென்னை - 07.**

**நாள் : ஜூன் 1, 2024 சனிக்கிழமை**



**நேரம் : மாலை 5.00 மணி**

**சுமார் 50 மாணவர்கள் தங்கள் கல்வியை முடித்து, ஊழியக்களங்களுக்கு அனுப்பப்படுவார்கள்.**

**2024–2025 ஆண்டுக்கான தமிழ் (மாலை நேரம்) மற்றும் இந்தி (முழு நேரம்) மாணவர்கள் 75 பேர் தேவை. தயவுசெய்து ஜெபியுங்கள்.**

**– ஆசிரியர்**

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்

| | |
|---|---|
| 1. ஜெப உதவி | – 24 மணி நேரம் |
| 2. அழைப்பின் எதிரொலி | – பத்திரிகைகள் (16 மொழிகள்) |
| தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ். | |
| 3. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் | – (மூன்று இடங்களில்) மாலை நேரம் / முழு நேரம் |
| 4. வேதாகமக் கடித முறைக் கல்வி | – தமிழ், ஆங்கிலம், இந்தி |
| 5. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | |
| 6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்) | |
| 7. பயிற்சி வகுப்புகள் | |
| 8. சுவிசேஷக் கூட்டங்கள் | |
| 9. கைப்பிரதி வினியோகம் | – தொடர் ஊழியம் |
| 10. சுவிசேஷ அச்சகம் | – சுவிசேஷ பிரசுரங்கள் |
| 11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி | – கிராம ஆங்கிலப் பள்ளி |
| 12. சிறுவர் வேத பாடசாலை | – ஞாயிறு காலை 10.30 மணி மாலை 4.00 மணி |
| 13. தமிழ் ஆராதனைகள் | – ஞாயிறு காலை 8.30 மணி |
| 14. இந்தி ஆராதனை | – ஞாயிறு மாலை 4.00 மணி |
| 15. தெலுங்கு ஆராதனை | – ஞாயிறு மாலை 5.00 மணி |
| 16. தமிழ் – ஆங்கிலம் ஆராதனை | – ஞாயிறு மாலை 6.00 மணி |
| 17. பெண்கள் ஆராதனை | – புதன் மாலை 5.30 மணி |
| 18. ஆண்கள் ஆராதனை | – வெள்ளி இரவு 7.00 மணி |
| 19. சீஷத்துவக் கூட்டம் | – சனி மாலை 6.00 மணி |
| 20. வீட்டுக் கூட்டங்கள் | – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி |
| 21. விசேஷ திருவிருந்து | – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி |
| 22. ஊழியர்கள் கூடுகை | – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி |
| 23. பெற்றோர் ஜெபம் | – முதல் ஞாயிறு மாலை 4. 00 மணி |
| 24. இரவு ஜெபம் | – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி |
| 25. உபவாச ஜெபம் | – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி |
| 26. திருவிருந்து | – 2–ம் ஞாயிறு ஆராதனைகள் |
| 27. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் | – தினமும் இரவு 10.00 மணி |
| 28. பணியாளர் ஜெபம் | – தினமும் காலை 9.00 மணி |
| 29. அலுவலகம் | – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர) |

## அழைப்பின் எதிரொலி
## தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு மட்டும்

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



"புதுவாழ்வு – உமக்கு" என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின் அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி
### பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல் வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக "அழைப்பின் எதிரொலி" அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) "Echo of His Call Educational Trust" என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |



# ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## கால்மிதிக்கும் தேசத்தை உனக்குத் தருவேன்!

... உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுத்தேன். (யோசுவா 1:3)

1973–ம் வருடம்! ஏப்ரல் – மே மாத வெயில் காலம்!! 3 நாட்கள் வாலிபர்களுக்கான ஒடுக்கக் கூட்டம் (Retreat for young men & women) சென்னை தாம்பரம் கார்லி உயர்நிலைப் பள்ளி வளாகம்! ஆசீர்வாத வாலிபர் இயக்கத்தின் நிறுவனர் மற்றும் அக்காலத் தலைமை ஊழியர் சகோதரர் R. ஸ்டான்லி அவர்களின் அனல்மூட்டும் செய்திகள்!

நானும் இக்கூட்டங்களில் கலந்துகொண்டேன். சுமார் 23 வயதிலும் ஏற்கனவே ஊழியம் செய்து கொண்டிருந்த என் வாழ்க்கையில் ஓர் சவால் நிறைந்த அனுபவத்தை அங்குப் பெற்றேன்.

3–ம் நாள் மதிய உணவுடன் அந்த முகாம் முடிவுற்றது. எல்லாரும் அவசரம் அவசரமாக தங்கள் தங்கள் வீடுகளுக்குப் பேருந்து மார்க்கமாகவும், இரயில் மார்க்கமாகவும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தனர்.

ஆனால் அந்த இடத்தை விட்டுச் செல்ல முடியாதவனாக சுமார் ஒரு மணிநேரம் என்னை அறியாமலேயே அந்தக் கடுமையான வெயிலின் மத்தியில் பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலால் அங்கு நின்று கொண்டே இருந்தேன். தேவ ஊழியர் சகோதரர் R. ஸ்டான்லி அவர்களின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் என் மனக்கண்களுக்கு முன்பாக வந்தன.

தேவ ஆவியானவர் என்னிடம் தம் மெல்லியக்குரலில் பேசினார்; உடனடியாக நான் தங்கியிருந்த இடத்திற்கு என்னால் போகமுடியவில்லை. அதற்கு மாறாக சென்னை – தாம்பரம் வேளச்சேரி ரோடு வழியாக அந்தக் கடும் வெயிலில் நடக்கும்படி ஆவியானவரால் நடத்தப்பட்டேன். என்னுடன் இருந்த இதர வாலிப ஆண்களும், பெண்களும் நான் பேருந்து அல்லது புகைவண்டிக்கு பயணச்சீட்டு வாங்கப் பணம் இல்லாமல் நடந்து போகிறேன் என்று அவரவர் சென்ற வாகனங்களின் ஜன்னல்கள் வழியாக என்னைப் பரிதாபத்துடன் பார்த்தனர்.

நான் எதற்கும் கவலைப்படாமல் என்னிடம் இருந்த சுவிசேஷ அச்சுப் பிரதிகளை எதிர் வரும் மக்களுக்கும் வழி நெடுகிலும் உள்ள வீடுகளில் வசித்த இதர மக்களுக்கும் வினியோகித்துக் கொண்டு சுமார் 12 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேலாக நடந்து சென்றேன். வழியில் பசி வந்தது; தாகம் வந்தது. செருப்பின் வார் அறுந்து போய்விட்டது. கையில் இருந்த பணமும் குறைய ஆரம்பித்தன. அங்கு சென்று கொண்டிருந்த வழிப்போக்கர்களும், அந்த கடும் வெயிலில் வார் அறுந்துபோன தன் பாதரட்சைகளையும், சில புத்தகங்களையும் சுமந்து செல்லும் இளைஞனான என்னை கவலையுடனும், பரிதாபத்துடனும் பார்த்தனர். கடுமையான வெயிலாக இருந்தபோதிலும், அந்த மாலையில் மழை பெய்ய ஆரம்பித்தது மற்றும் இரவு நேரமும் வர ஆரம்பித்தது. வேளச்சேரி என்ற இடம் வந்ததும் என் கையில் இருந்த சுவிசேஷக் கைப்பிரதிகளும் தீர்ந்து விட்டன. அப்போது அதிகமான ஆட்கள் நடமாட்டமும் இல்லாமல் இருந்தது.

இந்தக் கடினமான என் சூழ்நிலையைப் பரலோகத்திலிருந்து இரண்டு கண்களும் அவற்றுடன் பல்லாயிரக்கணக்கான இதர கண்களும் கூர்மையாய் என்னைப் பார்க்கிற அனுபவத்தை நான் அடைந்தேன். சரீர சோர்வுடனும், ஆவிக்குரிய பெலத்துடனும் சென்னை சேப்பாக்கத்தில் உள்ள என் இடத்திற்கு இரவில் வந்து சேர்ந்தேன்.

நாட்கள் கடந்தன. வருடங்களும் கடந்தன. நான் எந்தெந்த ஊர்கள் வழியாக கடந்து சென்றேனோ அங்கெல்லாம் **சகோதரர் துரை, சகோதரி பென்னலா** போன்ற ஆவிக்குரிய மக்களையும், குடும்பங்களையும் மற்றும் **அட்வன்ட் சபைப் போதகர்களையும்** தேவன் எனக்குக் கொடுத்தார். மட்டுமின்றி நான் நடந்து வந்த சந்தோஷபுரம் – விஜயநகரம், என்ற ஊரில் 1997–ம் வருடம் ஓர் தேவ சபையையும், ஓர் கிறிஸ்தவ ஆங்கிலம் உயர்நிலைப்பள்ளியையும் (**St. Paul's Matriculation School**) ஆண்டவர் தந்தார். என் நடை பயணத்தை முடித்த வேளச்சேரியில் நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரியையும்**, ஒரு தேவசபையையும் கட்டி நடத்தும்படி ஓர் தேவ மனிதர் தனது சொத்தை இலவசமாகக் கொடுத்தார்.

இந்நாள்வரை இவை இரண்டு ஊழிய ஸ்தலங்களும் **அழைப்பின் எதிரொலி ஊழியங்களின்** இரு கண்களைப் போல் சிறப்புடன் நடைபெற்று வருகின்றன.

பரிசுத்த ஆவியானவரின் உந்துதலுக்குக் கீழ்ப்படிந்து அன்று கடினமான அனுபவங்களை ஏற்றுக் கொள்ள தேவன் என்னை நடத்தினார். பாதை வெகு கடினம். ஆனால் முடிவோ பரம வெற்றி.

அன்பு சகோதரரே, சகோதரிகளே, தேவன் இப்படி உங்களிடம் பேசியதை நீங்கள் கேட்டதுண்டா? அதற்கு நீங்கள் உடனே கீழ்ப்படிந்தது உண்டா? உடனடியாக செயல் வடிவம் கொடுத்தது உண்டா? தேவன் கொடுத்த ஊழியத்தைச் செய்யாமல், வேதத்தில் சொல்லப்பட்ட யோனாவைப் போல் உங்கள் சந்தோஷத்திற்கும், விருப்பத்திற்கும் ஏற்ற ஊழியத்தைச் செய்து, இதுதான் தேவசித்தம் என்ற முடிவுக்கு வந்தவர்களில் நீங்களும் ஒருவரா?

அன்று கால் மிதிக்கும் தேசத்தை உனக்குத் தருவேன் என்று யோசுவாவுக்கு சொன்ன ஆண்டவர் அதை என் வாழ்க்கையிலும் நிறைவேற்றினார் (யோசுவா 14:9). உங்கள் வாழ்க்கையிலும் அப்படியே செய்வார். உங்களை அழைத்தவர் உண்மையுள்ளவர்.

அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் சித்தம் செய்து ஜீவனுள்ள தேவனை இந்த உலகிற்கு எடுத்துச் செல்ல முன் வாருங்கள். வெற்றி நிச்சயம்!

*******

... 6–ம் பக்கத் தொடர்ச்சி

**... ராஜா மகா கோபமும் உக்கிரமுங்கொண்டு, பாபிலோனில் இருக்கிற எல்லா ஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான். ... தானியேலையும், அவன் தோழரையும் கொலை செய்யத் தேடினார்கள்.** தானியேல் 2:12,13. எல்லாம் நன்றாகத்தான் போய்க் கொண்டிருந்தது. திடீரென்று அவன் தன் வேலையை இழந்து, அவனது புகழ், பொறுப்புகள், மரியாதை போன்ற அனைத்தையும் இழக்கும் சூழ்நிலை அவனுக்கு உண்டானது. எதற்கெல்லாம் அவன் கடினமாய் உழைத்திருந்தானோ, அனைத்தும் வீணாயிற்று.

தானியேல் என்ன செய்தான்? எதிலும் நிச்சயமில்லாத நிலையில் அவன் இருந்தான். இப்பொழுது தானியேல் என்ன செய்தான்? தன் தோழர்களுக்கு அதை அறிவித்து சேர்ந்து ஜெபித்தார்கள். தன்னைப் போன்ற விசுவாசம் கொண்ட மக்களோடு அவன் தன்னை இணைத்துக் கொண்டான். அத்தகைய சூழ்நிலையில் அவர்களும் அவனோடு நடக்கவும், அவன் சூழ்நிலைகளைப் புரிந்து கொள்பவர் களாகவும் இருந்தார்கள். அவர்கள் ஜெபித்தார்கள். அதன்பின் என்ன நடந்ததென்று நாம் அறிவோம். தேவன் தமது எதிர்காலத் திட்டங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்.

நம் தேவன் மிகப் பெரியவர். எனவே, தேவ பக்தியுள்ள மக்கள் உங்களைச் சூழ்ந்து கொள்ளட்டும்!

## *3. நீங்கள் அமர்ந்திருந்து, நானே தேவனென்று அறிந்து கொள்ளுங்கள் ... – சங்கீதம் 46:10.*

நிச்சயமற்ற நிலைமையில் நாம் இருக்கும்போது, அது நம் மூளையின் 'முன்புறணி' என்று சொல்லப்படும் பகுதியைப் பாதித்து, அனைத்து திறன்களையும் மூடிவிடும். அத்தகைய நிலையில் பிரச்சனைகளை எதிர்கொண்டு தீர்க்கும் திறன், கவனம் செலுத்தும் திறன், வளைந்து கொடுக்கும் திறன் ஆகியவற்றைப் பாதித்து விடும். அப்பொழுது பகுத்தறிவற்ற, நியாயமற்ற செயல்களைச் செய்ய உங்களைத் தூண்டிவிடும். அது மேலும் ஒருவித படபடப்பு, மனச்சோர்வு, மனஅழுத்தம் ஆகியவற்றினால் உங்களைத் தாக்கிவிடும்.

ஆகையால்தான், தேவனது சத்தியங்களில் கவனம் செலுத்தி, அதிலேயே முழு நோக்கமாக இருப்பது அவசியம்.

அமைதியுடன் அமர்ந்திருப்பது ஒருவித ஒழுக்கம். அந்த ஒழுக்கத்தைப் பெற தொடர்ந்து மனதார பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு அமைதிகாப்பது நமது உணர்ச்சிகளைச் சீர்படுத்தி, நம் வாழ்வின் சூழ்நிலைகளில் தேவபிரசன்னத்தை உணர வைக்கும்.

அப்பொழுது நாம் குழம்பி காணப்பட்டாலும், வானத்தையும், பூமியையும் படைத்த கர்த்தரை நோக்கிப் பார்க்க வேண்டும். நம் கண்களை நமக்கு ஒத்தாசை வரும் பர்வதத்திற்கு நேராய் திருப்ப வேண்டும். அவரே பூமியை அசைத்து, கடலை நடுங்கச் செய்கிறவர். வாசலைத் திறக்கிறவரும், அடைப்பவரும் அவரே.

தேவ சமூகத்தில் அமர்ந்திருப்பது என்றால், தேவ பிரசன்னத்திற்குள்ளாய்க் கடந்து சென்று, ஒன்றும் பேசாமல் அமர்ந்திருப்பதாகும். நமது விசுவாசத்தைத் துவக்கினவரும் முடிக்கிறவருமாகிய அவரிடம் சென்று ஒன்றும் சொல்லாமல் அவர் உங்களிடத்தில் பேசுவதைக் கேட்கும் வரைக்கும் காத்திருங்கள். தேவனது யுத்தத்தை உங்களது யுத்தமாக எடுத்துக் கொள்ளாதீர்கள்!

தேவபிரசன்னத்திற்குள்ளாய் நீங்கள் செல்லும்போது:

1) உங்களுடைய வரம்புகளை ஏற்று அறிக்கையிடுங்கள் – உங்களுடைய உணர்ச்சியைத் தெளிவாய் சொல்லி விடுங்கள்.

2) உங்களிடத்தில் இருப்பதை தேவனிடத்தில் கொடுத்து விடுங்கள் – அந்தக் கோலைப் போல – அது தேவனது கோலாகட்டும் / தேவன் அதைத் தம் பிரச்சனையாகக் கருதி என்ன செய்வாரோ செய்யட்டும்.

3) தேவன் தந்த வாக்குத்தத்தங்களை அறிக்கை செய்யத் தொடங்குங்கள் – அறிக்கை செய்ய வேண்டுமானால் அந்த வசனங்கள் உங்களுக்கு மனப்பாடமாகத் தெரிய வேண்டும்.

4) **கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள்** ... யாத்திராகமம் 14:14.

அன்பான நண்பர்களே! உங்களுடன் நடக்க நம்பிக்கையான மக்களை தேவன் காண்பிக்கும்படி தேவனிடத்தில் கேளுங்கள். தேவ சமூகத்தில் அமைதியாய் இருக்க தேவன் உங்களுக்குக் கற்றுக் கொடுக்கும்படிக்கு அவரிடத்தில் கேளுங்கள். அமைதியாக இருந்து அவரிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள். ... **அமரிக்கையும் நம்பிக்கையுமே உங்கள் பெலனாயிருக்கும்.** ... ஏசாயா 30:15. என்ன நடந்தாலும், உங்கள் சூழ்நிலை எத்தகைய இருளாய் இருந்தாலும், சர்வ வல்லவரை நம்புங்கள். கோணலான எல்லா வழிகளையும் அவர் செவ்வையாக்குவார். **அவர் அதிசயங்களைச் செய்கிற தேவன்** (சங்கீதம் 77:14).

*******


## இந்தி புத்தகங்கள் தேவை

நமது **நெகேமியா வேதாகமக் கல்லூரிகளுக்காக** 1000 இந்தி கிறிஸ்தவ புத்தகங்கள் தேவைப்படுகின்றன. இந்தி வேதாகம புத்தகங்களை (Theological Books) சேகரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை தயவு செய்து எங்களுக்குத் தெரிவிக்கவும்.

**தேவையான தமிழ் மற்றும் ஆங்கில புத்தகங்கள் சேர்ந்து விட்டதால் தயவுசெய்து இனி தமிழ் மற்றும் ஆங்கில புத்தகங்களை அனுப்ப வேண்டாம்.**

**– எஸ். சாம் செல்வ ராஜ், ஆசிரியர்**
+91-98412 71858

## உடனடி தேவை

**துணை தலைமை ஆசிரியர் & ஆசிரியர்கள்**

**செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி**
**An *Echo of His Call* Institution**
**விஜயநகரம், மேடவாக்கம், சென்னை – 100.**

சிறந்த கல்வித் தகுதி, அனுபவம், அர்ப்பணிப்பு மற்றும் ஊழிய நோக்குடன் பணிபுரியும் கிறிஸ்தவர்கள் தேவை.

*சுய விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.*
E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98412 71858

## தேவை

**சென்னை – அழைப்பின் எதிரொலியின்**
**நெகேமியா வேதாகமக் கல்லூரி**
**ATA - Registered Candidate for Membership**

**DEAN (Residential):**
அனுபவத்துடன் கூடிய இந்தி இறையியலாளர் (Hindi Theologian) M.Div. / M.Th.

தகுதியுள்ளவர்கள் தங்களது விண்ணப்பத்தை (Bio-Data) அனுப்ப வேண்டிய முகவரி:

E.mail: sam@echoofhiscall.org
WhatsApp: (+91) 98410 71858

RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

***1. Bank : State Bank of India***

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **S. Sam Selva Raj** |
| A/C No. | : | **1023 2934 679** |
| IFSC | : | **SBIN 00 00 249** |
| SWIFT CODE | : | **SBI NIN BB 455** |

***2. Bank : ICICI Bank***

| | | |
|---|---|---|
| Branch | : | **Anna Salai, Chennai-6** |
| Name | : | **Echo of His Call** |
| A/C No. | : | **6038 0502 2319** |
| IFSC | : | **ICIC 000 6038** |

***3. Bank : State Bank of India***

**(This Account is for Tax Exemption for Indians only )**

| | | |
|---|---|---|
| Branch | : | **Triplicane, Chennai-5** |
| Name | : | **Echo of His Call Educational Trust** |
| A/C No. | : | **1023 2923 805** |
| IFSC | : | **SBIN 00 00 249** |

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
E.mail : sam@echoofhiscall.org

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS / 1 Patrika Channel"**
**on 28th FEBRUARY 2024**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

***GOD BLESS YOU!***

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**